# சமூக அறிவியல்


நான்காம் வகுப்பு

இரண்டாம் பருவம்

## குறியீடுகளின் விளக்கங்கள்




சிந்தித்து விடையளி



சரியான விடையைத் தேர்ந்தெடு



புள்ளி விவரம் சேகரித்தல்




கோடிட்ட இடங்களை நிரப்புக



தகவல் சேகரித்தல்




குறியிடுக




சரியா ? தவறா ?



சிந்திக்க



பொருத்துக



வகைபடுத்துக



செயல் திட்டம் / குழுச்செயல்பாடு







# நமது நாடு

இந்தியா உலகின் மிகப்பெரிய கண்டமான ஆசியாவின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இது ஒரு துணைக்கண்டம் ஆகும். உலகிலேயே பரப்பளவில் ஏழாவது மிகப்பெரிய நாடாகும். உலக அளவில் மக்கள் தொகையில் சீனாவிற்கு அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

**அ. ஆசிய வரைபடத்தில் உள்ள இந்தியாவை வண்ணமிடு.**

ஆசியா வரைபடம்




**ஆ. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுது.**

______________________________

______________________________


______________________________

______________________________


______________________________

______________________________

______________________________



இயற்கையில் இந்தியா மூன்று பக்கங்கள் நீராலும் ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்டுள்ளதால் இதனைத் தீபகற்பம் என்று கூறுகிறோம். இந்தியாவின் மொத்தப்பரப்பளவு **32,87,263** சதுர கிலோமீட்டராகும்.





## இயற்கை அமைப்பு

இந்தியா பல்வேறுபட்ட நில அமைப்புகளைக் கொண்டுள்ளது. அவற்றை 6 பிரிவுகளாகப் பிரித்து அறியலாம்.

1. வட இந்திய மலைத்தொடர் 2. வட இந்தியச் சமவெளிகள் 3. தார் பாலைவனம் 4. பீடபூமிகள் 5. கடற்கரைச் சமவெளிகள் 6. தீவுகள்

## 1. வட இந்திய மலைத்தொடர்

இந்தியாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள நீண்ட மிகப்பெரிய மலைத்தொடர் இமய மலையாகும். இது உலகிலேயே மிக உயர்ந்த சிகரங்களைக் கொண்ட மலைத்தொடர் ஆகும்.



இதில் ஹிமாத்திரி, ஹிமாச்சல், சிவாலிக் ஆகிய மூன்று மலைத்தொடர்கள் உள்ளன. இமயமலை ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும். எப்போதும் இங்கு கடுங்குளிர் காலநிலை நிலவுகிறது.

இது மத்திய ஆசியாவிலிருந்து வட இந்தியாவை நோக்கி வீசும் கடுங்குளிர்க் காற்றைத் தடுக்கும் இயற்கை அரணாக அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் வற்றாத ஆறுகளை உருவாக்கி உள்ளது.

## 2. வட இந்தியச் சமவெளிகள்




இது இமயமலையின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இங்குச் சிந்து, கங்கை மற்றும் அதன் துணை ஆறுகள் பாய்ந்து இப்பகுதியை வளப்படுத்துகின்றன. இவை ஆண்டு முழுவதும் தாம் பாயும் சமவெளிப் பகுதிகளுக்குச் செழிப்பான வண்டல் மண் வளத்தையும், நீர் வளத்தையும் அளிக்கின்றன.

வரைபடத்தின் உதவியுடன் இந்தியாவில் பாயும் ஆறுகளின் பெயர்களை எடுத்து எழுதுக.

______________________________

______________________________



சமவெளிப் பகுதிகளில் கோதுமை, அரிசி, கரும்பு மற்றும் பருத்தி அதிக அளவு விவசாயம் செய்யப்படுகிறது. எனவே இப்பகுதிகளில் மக்கள் தொகை அதிகமாக உள்ளது.

## 3. தார் பாலைவனம்

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய பாலைவனம் தார்பாலைவனம் ஆகும். இது இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ளது. இது ஏறக்குறைய இரண்டு இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பைக் கொண்டது.

தார் பாலைவனம் மிக வறண்ட மணல் பாலைவனமாகும். இங்கு நீர்ப் பற்றாக்குறை இருப்பதால் ஒரு சில நகரங்கள் மட்டுமே அமைந்துள்ளன. இப்பாலைவனத்தின் வட பகுதியில் நீர்ப் பற்றாக்குறையைப் போக்க 649கி.மீ நீளமுள்ள இந்திரா காந்தி கால்வாய் வெட்டப்பட்டுள்ளது.


தார் பாலைவனம்


தக்காணப் பீடபூமி

## 4. பீடபூமிகள்

ஒரு நிலப் பரப்பானது அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியினைக் காட்டிலும் உயரமானதாகவும் அதன் மேல் பகுதி தட்டையாகவும் இருந்தால் அதனைப் பீடபூமி என்கின்றோம்.

வட இந்தியச் சமவெளிக்குத் தென் பகுதியில் ஆரம்பிக்கும் பீடபூமி இந்தியாவின் தென்கோடியில் முடிவடைகிறது. இப்பகுதியில் மாளவ பீடபூமி, தக்காணப் பீடபூமி, சோட்டாநாக்பூர் பீடபூமி ஆகிய மூன்று பீடபூமிகள் உள்ளன. தக்காணப் பீடபூமி தென்னிந்தியாவில் விரிந்து பரவியுள்ளது. இது முக்கோண வடிவத்தில் அமைந்துள்ளது. தக்காணப் பீடபூமி மேற்கிலிருந்து கிழக்காகச் சரிந்துள்ளது. எனவே இங்கு உற்பத்தியாகும் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. நர்மதா, தபதி ஆறுகள் மேற்காகப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன.

- தக்காணப் பீடபூமி குன்றுகளாலும், மலைகளாலும் சூழப்பட்டுள்ளது. அடர்ந்த காடுகள் இப்பகுதியில் காணப்படுவதால் பழங்குடி மக்கள் இங்கே அதிகமாக வாழ்கின்றனர்.

## 5. கடற்கரைச் சமவெளிகள்

இந்தியாவின் மூன்று பக்கங்களும் அரபிக்கடல், வங்காள விரிகுடா மற்றும் இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இவற்றையொட்டியுள்ள நிலப்பகுதிகள் கடற்கரைச் சமவெளிகள் ஆகும்.

| மேற்குக் கடற்கரைச் சமவெளி | கிழக்குக் கடற்கரைச் சமவெளி |
|---|---|
| அரபிக்கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடருக்கும் இடையில் அமைந்துள்ளது. | வங்காள விரிகுடாவுக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடருக்கும் இடையில் அமைந்துள்ளது. |
| இங்குக்கொங்கணக் கடற்கரையும் மலபார் கடற்கரையும் அமைந்துள்ளது. | இங்குச்சோழமண்டலக் கடற்கரையும் வடசர்க்கார் கடற்கரையும் அமைந்துள்ளது. |
| இங்கு மும்பை, கண்ட்லா, கொச்சி மற்றும் பனாஜி துறைமுகங்கள் உள்ளன. | இங்குக் கொல்கத்தா, விசாகப் பட்டினம், சென்னை மற்றும் புதுச்சேரி துறைமுகங்கள் உள்ளன. |







## 6. தீவுகள்

நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட நில அமைப்பைத் தீவு என்கிறோம். அரபிக்கடலில் இலட்சத்தீவுகளும், வங்காள விரிகுடாக் கடலில் அந்தமான் நிக்கோபார் தீவுகளும் உள்ளன. இலட்சத்தீவுகளில் உள்ள தீவுகள் பெரும்பாலும் பவளப்பாறைகளால் உருவானவைகளாகும்.

அந்தமான் & நிக்கோபார்தீவுகளில் சுமார் 300 சிறுசிறு தீவுகள் உள்ளன. இலட்சத்தீவுகளில் சுமார் 30 தீவுக் கூட்டங்கள் உள்ளன. இங்குள்ள சில தீவுகளில் மக்கள் வசிப்பதில்லை.

## அரசியல் பிரிவுகள்

இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசு நாடாகும். இந்தியா 29 மாநிலங்களாகவும், 7மத்திய ஆட்சிப் பகுதிகளாகவும், புதுதில்லி தேசியத் தலைநகர்ப் பகுதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.



மாநில அரசுகள் தனியாகவும், மத்திய ஆட்சிப் பகுதிகள் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன. இந்தியாவின் தலைநகரம் புதுதில்லி ஆகும்.

இந்திய அரசியல் வரைபடத்தின் உதவியுடன் தலைநகரங்களின் பெயர்களை எழுதுக.

| வ.எண். | மாநிலங்கள் | தலைநகரம் |
|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | |
| 2. | அருணாச்சலப் பிரதேசம் | |
| 3. | அஸ்ஸாம் | |
| 4. | பீகார் | |
| 5. | சட்டிஸ்கர் | |
| 6. | கோவா | |
| 7. | குஜராத் | |
| 8. | ஹரியானா | |
| 9. | இமாச்சலப் பிரதேசம் | |
| 10. | ஜம்மு, காஷ்மீர் | |
| 11. | ஜார்க்கண்ட் | |
| 12. | கர்நாடகம் | |
| 13. | கேரளம் | |
| 14. | மத்தியப் பிரதேசம் | |
| 15. | மகாராஷ்டிரம் | |
| 16. | மணிப்பூர் | |
| 17. | மேகாலயா | |
| 18. | மிசோரம் | |
| 19. | நாகாலாந்து | |
| 20. | ஒடிசா | |
| 21. | பஞ்சாப் | |
| 22. | இராஜஸ்தான் | |
| 23. | சிக்கிம் | |
| 24. | தமிழ்நாடு | |
| 25. | திரிபுரா | |
| 26. | தெலுங்கானா | |
| 27. | உத்ரகண்ட் | |
| 28. | உத்திரப் பிரதேசம் | |
| 29. | மேற்கு வங்காளம் | |

## மத்திய ஆட்சிப் பகுதிகள்

1. அந்தமான் நிக்கோபார்
2. சண்டிகர்
3. தாத்ரா நாகர் ஹவேலி
4. டாமன், டையூ
5. புதுச்சேரி
6. இலட்சத்தீவு
7. புதுதில்லி தேசியத் தலைநகர்ப் பகுதி


## இந்தியாவின் அண்டை நாடுகள்

இந்தியாவின் அண்டை நாடுகள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா, நேபாளம், பூடான், மியான்மர், பங்களாதேஷ், இலங்கை ஆகியனவாகும்.

## தெரிந்து கொள்வோம்

- உலகிலேயே மிக உயர்ந்த சிகரமாகிய எவரெஸ்ட் இமயமலைத்தொடரில் உள்ளது. இதன் உயரம் 8848 மீட்டர்.
- நியூசிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி, இந்தியாவைச்சேர்ந்த டென்சிங் நார்கே, ஆகியோர் கி.பி.1953இல் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்தனர்.
- எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி பச்சேந்திரி பால்.
- கடலுக்கு அடியில் வாழும் ஒரு முதுகெலும்பில்லா உயிரினம் பவளப்பாலிப்புகள் ஆகும். அவை இறந்த பிறகு அவற்றின் கூடுகள் ஒன்றன்மேல் ஒன்றாகப் படிந்து பவளப்பாறைகளாக உருவாகின்றன.
- பாலைவனத்தில் கோடைக்கால இரவுகள் இதமாகவும், குளிர்கால இரவுகள் கடுங்குளிராகவும் இருக்கும்.
- இமயமலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற மலைவாழிடங்கள் சிம்லா, முசௌரி, அல்மோரா, நைனிடால் மற்றும் டார்ஜிலிங். இவை கோடைக்காலத்தில் மக்களின் கவனத்தை அதிக அளவில் ஈர்க்கின்றன.
- காஷ்மீர் மாநிலத்திற்குக் கோடைக்காலத்தின் தலைநகரம் ஸ்ரீநகர். குளிர் காலத்தின் தலைநகரம் ஜம்மு ஆகும்.

கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் மாநிலங்களையும் அதன் தலைநகரங்களையும் எழுதுக.



## செயல்பாடு: (இந்திய வரைபடத்தின் துணையோடு செய்க)



1. பிரதேசம் என முடியும் மாநிலங்களைக் கண்டுபிடித்து அவற்றின் பெயர்களை எழுதுக ______________________________.

2. இந்தியாவின் வடகோடியில் உள்ள மாநிலம் ____________ தென் கோடியில் உள்ள மாநிலம் ____________________.


3. ஜார்கண்ட் மாநிலத்திலிருந்து நான்கு நண்பர்கள் சுற்றுலாச் சென்றனர். ஒவ்வொருவரும் தங்கள் மாநிலத்திலிருந்து வடக்கு,தெற்கு,மேற்கு மற்றும் கிழக்குத் திசையில் சென்றால் அவர்கள் முறையே எந்தெந்த அண்டை மாநிலங்களைச் சென்றடைவர் ?

4. பீகாரில் கால் பந்து போட்டி நடைபெறுகிறது. இராஜஸ்தானைச் சேர்ந்த வீரர்கள் போட்டியில் கலந்து கொள்ளச் செல்கின்றனர், அவர்கள் எந்தெந்த மாநிலங்களைக் கடந்து சென்றிருப்பர் ?

5. தமிழ்நாட்டைச் சேர்ந்த நடனக் கலைக்குழு புதுதில்லி சென்றது. அது எந்தெந்த மாநிலங்களைக் கடந்து புதுதில்லியைச் சென்றடைந்திருக்கும். கண்டுபிடி.


6. உன் வீட்டில் பயன்படுத்தும் வீட்டு உபயோகப்பொருட்களின் உறைகளைச் சேகரி. அவை எந்த மாநிலத்தில் தயாரிக்கப்பட்டவை எனக் கவனி. அந்த உறையின் ஒரு முனையைக் கத்தரித்து அந்த மாநிலத்தில் ஒட்டு.

7. இந்தியாவின் எல்லைகளை எழுதுக.



இந்தியா இயற்கை அமைப்பு வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்.

1. வட இந்திய மலைத்தொடர் 2. வட இந்தியச் சமவெளிகள் 3. தார் பாலைவனம் 4. தக்காணப் பீடபூமி 5. கடற்கரைச் சமவெளிகள்






## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. இந்தியாவில் அமைந்துள்ள பாலைவனம் ________________.
   (அ) சகாரா (ஆ) தார் (இ) அடகாமா
2. இந்தியாவின் இயற்கை அரணாக ______________அமைந்துள்ளது.
   (அ) இமயமலை (ஆ) ஆண்டிஸ் மலை (இ) மேற்குத் தொடர்ச்சி மலை
3. தக்காணப் பீடபூமி______________ வடிவத்தில் அமைந்துள்ளது.
   (அ) சதுரம் (ஆ) செவ்வகம் (இ) முக்கோணம்
4. இந்தியா ஆசியாவின் ______________ என்று அழைக்கப்படுகிறது.
   (அ) துணைக்கண்டம் (ஆ) தீபகற்பம் (இ) தீவு
5. இந்தியாவின் தலைநகரம் ______________.
   (அ) சென்னை (ஆ) கொல்கத்தா (இ) புதுதில்லி



### II. கோடிட்ட இடத்தை நிரப்புக


1. இந்தியாவின் மிகப் பெரிய மாநிலம்______________.
2. இந்தியாவில் உள்ள மாநிலங்களின் எண்ணிக்கை ______________.
3. இந்தியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய மலைத்தொடர் ______________.
4. அரபிக்கடலில் கலக்கும் இந்திய ஆறுகள்____________ , ___________.
5. தார்பாலைவனத்தின் வடபகுதியில் ______________________ கால்வாய் வெட்டப்பட்டுள்ளது.

### III. வினாக்களுக்கு விடையளி



1. இந்தியாவின் இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை ?
2. இமயமலையின் மூன்று மலைத்தொடர்கள் யாவை ?
3. தீபகற்பம் என்றால் என்ன ?
4. இந்தியாவின் அண்டை நாடுகள் யாவை ?
5. இந்தியாவில் காணப்படும் இரண்டு தீவுக் கூட்டங்களை எழுது ?

### IV. சிந்திக்க



1. இமயமலை இந்தியாவில் இல்லாமல் இருந்திருந்தால் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் ?
2. பாலைவனப் பகுதிகளில் மக்கள் தொகை குறைவாக இருப்பதற்கான காரணங்களைச் சிந்திக்க.



# தேசியச் சின்னங்கள்

பால கங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, மௌலானா அபுல்கலாம் ஆசாத், மகாத்மா காந்தி , சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு போன்ற எண்ணற்ற தலைவர்களின் தியாகத்தால் சுதந்ர இந்தியா பிறந்தது. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் அதன் தனித்தன்மையை வெளிப்படுத்த தேசியச் சின்னங்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

## தேசியக்கொடி



இந்திய தேசியக்கொடியில் மூன்று வண்ணங்களும், அதன் நடுவே அசோகச்சக்கரமும் உள்ளது. மூவண்ணக்கொடியின் மூன்று வண்ணங்கள் உணர்த்துவது

- காவி – தியாகம்
- வெள்ளை – உண்மை, நீதி, அமைதி
- பச்சை – நாட்டின் செழிப்பு


மூவண்ணக்கொடியின் நடுவே கருநீல நிறத்தில் அசோகச்சக்கரம் உள்ளது. அசோகச் சக்கரத்தில் உள்ள 24 ஆரங்களும் அசோகர் பின்பற்றிய புத்த மதத்தின் 24 சமத்துவக் கோட்பாடுகளைக் குறிக்கின்றன. நம் நாடு கி.பி.1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் விடுதலை பெற்றது. அந்நாளில் புதுதில்லியில் உள்ள கோட்டையில் முதன் முதலில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

## தேசியச்சின்னம்



உத்திரப் பிரதேசம் மாநிலத்தில் **சாரநாத்** என்ற பழமையான நகரில் அசோகரின் கல்தூண் அமைந்துள்ளது. அதன் உச்சியில் நான்கு சிங்கங்கள் நான்கு பக்கங்களிலும் பார்த்தவாறு அமர்ந்துள்ளன. அது 1950ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 26ஆம் நாளன்று தேசியச்சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேசியச் சின்னத்தின் அடியில் **வாய்மையே வெல்லும்** என்று பொருள்படும் **சத்யமேவ ஜயதே** என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

## தேசிய கீதம்



நமது தேசிய கீதம் இரவீந்திரநாத தாகூரால் எழுதப்பட்டது. தாகூர் சிறந்த வங்காளக் கவிஞர், நாடகக்கலைஞர், புகழ் பெற்ற ஓவியர் ஆவார். இவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது. சுதந்தரதினம், குடியரசு தினம் மற்றும் அனைத்து தேசிய நிகழ்ச்சிகளிலும் இப்பாடல் பாடப்படுகிறது.

- ♬ நமது தேசிய கீதத்தில் மொத்தம் 13 வரிகள் உள்ளன. இது வங்காள மொழியில் எழுதப்பட்டுள்ளது.
- ♬ நமது தேசிய கீதம் 52 நொடிகளுக்குள் பாடி முடிக்கப்படவேண்டும்.

## தேசிய விலங்கு




இந்தியாவின் தேசிய விலங்கு வங்காளத்துப் புலி. இது வலிமைக்கும், அச்சமின்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.



## தேசியப்பறவை

நம் நாட்டின் தேசியப்பறவை மயில் ஆகும். அதன் அழகு மற்றும் தோகை நம் நாட்டின் இயற்கை அழகைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

## தேசியப்பாடல்



வங்காளக் கவிஞர் பங்கிம் சந்திரசாட்டர்ஜி எழுதிய **வந்தே மாதரம்** என்ற பாடல் நம் நாட்டின் தேசியப் பாடலாகப் போற்றப்படுகிறது. இது தேசியக் கீதத்திற்கு இணையாக மதிக்கப்படுகிறது.

## தேசிய மலர்



தாமரை ஒற்றுமையை உருவகப்படுத்துவதால் நம் நாட்டின் தேசிய மலராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## தேசிய மரம்



பரந்து விரிந்து, உறுதியாக நிற்கும், ஆலமரம் இந்தியாவின் தேசிய மரமாகும்.



## தேசியப் பழம்


இந்தியாவின் பல பகுதிகளில் விளையும் முக்கனிகளில் ஒன்று மாம்பழம். இது இந்தியாவின் தேசியப் பழமாகும்.

நமது தேசியச் சின்னங்கள் நம் நாட்டின் சுதந்திரத்தையும் ஒருமைப்பாட்டையும் குறிக்கின்றன. எனவே நமது நாட்டின் சின்னங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.


## தாளில் நகல் எடுப்போமா ?

கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தின் பின் பக்கம் நாணயத்தில் உள்ள தேசியச் சின்னத்தை வைக்கவும். பென்சிலைக் கொண்டு கட்டத்தின் மேல் பக்கம் தேய்க்கவும். படத்தில் உள்ளது போன்று தேசியச் சின்னம் வெளிப்படும்.










## மதிப்பீடு

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நமது நாட்டின் தேசிய மலர் ____________________.
2. தேசியச் சின்னத்தின் கீழே எழுதப்பட்டுள்ள வாசகம் _________________.
3. தேசிய கொடியில் உள்ள வெண்மை நிறம்__________ யை வலியுறுத்துகிறது.
4. நமது நாட்டின் தேசியப் பறவை _________________.



### II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. வந்தே மாதரம் | – | சாரநாத் |
| 2. தேசிய மரம் | – | புலி |
| 3. தேசிய விலங்கு | – | பங்கிம் சந்திர சாட்டர்ஜி |
| 4. தேசிய கீதம் | – | ஆலமரம் |
| 5. அசோகத் தூண் | – | இரவீந்திரநாத் தாகூர் |



### III. சிறுவினாக்கள்

1. தேசிய கீதம் எந்தெந்த நிகழ்ச்சிகளில் பாடப்படுகிறது ?
2. மூவண்ணக் கொடியின் மூன்று வண்ணங்கள் உணர்த்துவது எது ?

### IV. உனது பள்ளிக்கென்று ஒரு சின்னத்தை வரைந்து குறிக்கோளையும் கீழே எழுது.